www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் போராட்டமும் தமிழகத்தின் கடமையும்



பழ. நெடுமாறன், எம். ஏ.,
தலைவர்,
தமிழர் தேசிய இயக்கம்
தமிழ்நாடு

இரண்டாவது உலகத் தமிழர் மாநாடு — இலண்டன்—ஏப்ரல் 29, 30—1989

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் போராட்டமும் — தமிழகத்தின் கடமையும்

— நெடுமாறன் —

முப்பது ஆண்டு காலத்திற்கு மேலாக இலங்கைத் தமிழர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடி வந்திருந்தாலும், அப்போராட்டத்தின் தன்மை, வடிவம், நோக்கம் ஆகியவை குறித்து தமிழ்நாட்டு மக்கள் போதுமான அளவு அறிந்துகொண்டிருக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். கடந்த காலத்தில் தமிழ்நாட்டு மக்களுக்குப் போதுமான விழிப்புணர்ச்சி இருந்திருக்குமேயானால் இந்திய வம்சா வழித் தமிழர்களின் உரிமைகளைப் பறித்த நிகழ்ச்சிகளான சிறிமாவே - சாஸ்திரி உடன்பாடு, சிறிமாவோ - இந்திரா உடன்பாடு, கச்சத்தீவு தாரைவார்ப்பு போன்றவை நடைபெற்றிருக்க முடியாது.

1957ஆம் ஆண்டில் இலங்கைப் பிரதமராயிருந்த திரு. பண்டாரநாயகா, 1965ஆம் ஆண்டில் பிரதமராயிருந்த திரு. டட்லி சேனநாயகா ஆகியோர் தமிழர் தலைவர் திரு. செல்வநாயகத்துடன் செய்து கொண்ட உடன்பாடுகளை சிங்கள வெறியர்களின் எதிர்ப்பின் விளைவாக இலங்கை அரசு கைகழுவியது. அந்தச் சந்தர்ப்பங்களில் இந்திய அரசு தனது எதிர்ப்பையும், கவலையையும் தெரிவித்திருந்தால் அந்த உடன்பாடுகளை அமல் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருந்திருக்கும்.

1958, 1961, 1974, 1977, 1981 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து தமிழர்களுக்கு எதிராக சிங்களரும், சிங்கள இராணுவமும் வன்முறைகளில் ஈடுபட்டபோது இந்தியா அவற்றைப் பற்றி கவலைப் படவில்லை. இந்திய அரசை வற்புறுத்தத் தமிழகமும் தவறிவிட்டது.

1981ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மீண்டும் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் நடை பெற்றன. யாழ் நூலகத்தைச் சிங்கள ராணுவம் எரித்து அடியோடு நாசப்படுத்திவிட்டது.

7—12—1981ஆம் ஆண்டு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் அனைத் துக் கட்சித் தூதுக்குழு பிரதமர் இந்திராவை டில்லியில் சந்தித்தது. தமிழ்நாட்டின் வரலாற்றில் தமிழர் பிரச்னைக்காக அனைத்துக் கட்சித் தூதுக்குழு ஒன்று முதலமைச்சர் தலைமையில் இந்தியப் பிரதமரைச் சந்தித்தது அதுவே முதல் தடவையாகும்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கொழும்பு நகரில் நடைபெற்ற தமிழருக்கு எதிரான பெருங் கலவரங்கள்தான் தமிழ்நாட்டு மக்களை முதன்முதலாக அதிர்ச்சியடையவைத்தன, இலங்கைத் தமிழர்பால் அனுதாபம்கொள்ளவைத்தன. மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியும், தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் போன்ற விடுதலைப் போராளிகள் சிறைச்சாலையில் கொடூர மான முறையில் கொல்லப்பட்ட நிகழ்ச்சியும் தமிழக மக்களை நீண்ட தூக்கத்திலிருந்து விழிப்படைய வைத்தன. இதற்குப் பிறகே இலங்கைத் தமிழர் பிரச்னையின் மீது தமிழக மக்களின் ஒட்டுமொத்தமான கவனம் திரும்பியது. இவற்றின் விளைவாகத் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்ட எழுச்சி இந்தியா பூராவிலும் பார-தூரமான விளைவுகளை ஏற்படுத்திற்று.

''இலங்கைத் தமிழர் பிரச்னை அந்நிய நாடு ஒன்றின் உள்நாட்டுப் பிரச்னை. அதில் எப்படித் தலையிடுவது'' எனத் தயங்கிக்கொண்டிருந்த இந்திய அரசு இப்பிரச்னையில் தலையிட்டுத் தீர வேண்டிய அவசியத்தைத் தமிழ்நாட்டு மக்களின் போராட்டங்கள் ஏற்படுத்திவிட்டன. இந்தியாவிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் இப்பிரச்னையில் கவனம் செலுத்த வேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டன. 1983ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் தமிழகத்தில் அரசியல், சாதி, சமய வேறுபாடில்லாமல் அனைத்துத் தமிழர்களும் ஒன்றுபட்டு நடத்திய போராட்டங்கள் ஒரு மாபெரும் விழிப்புணர்வை வெளிப் படுத்தின. அரசியல் கட்சிகளோ, தலைவர்களோ தூண்டிவிட்டு நடத்திய போராட்டங்களாக இப் போராட்டங்கள் அமையவில்லை. இயற்கையாகத் தமிழ்நாட்டு மக்கள் கொந்தளித்தார்கள். கொதித் தெழுந்தார்கள். இது வெறும் ஆவேசத்தினாலேயோ அல்லது உணர்ச்சிப் பெருக்கினாலேயோ ஏற்பட் டவை அல்ல. தெளிவாகச் சொல்லப்போனால் மங்கிக் கிடந்த தமிழர் தேசிய உணர்வு பொங்கிக் கிளம்பிற்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்றுதான் இதைக் கூற வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதலாவது தாக்கம் இதுதான். தமிழ்நாட்டில் மட்டுமல்ல உலகெங்கும் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்கள் நடுவிலும் தமிழர் தேசிய உணர்வு பீரிட்டுக் கிளம்ப இது வழிவகுத்தது. தமிழ்நாட்டு மக்களின் கொந்தளிப்பைத் தணிப்பதற்காக இந்திய அரசு இப்பிரச்னையில் அக்கறைகாட்ட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாயிற்று. அப்போது இந்திய வெளிநாட்டு அமைச்சராகவிருந்த திரு. பி. வி. நரசிம்மராவ், திரு. ஜி. பார்த்தசாரதி ஆகியோரைப் பிரதமர் இந்திரா கொழும்புவிற்கு அனுப்பினார். இதைத் தொடர்ந்து பல கட்டங்களில் இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. தமிழர் பிரதிநிதிகளுக்கும், இலங்கை அரசுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன.

பிரதமர் திருமதி. இந்திராகாந்தி தலைமையில் திரு. ஜி. பார்த்தசாரதி இலங்கைப் பிரச்னையில் மேற்கொண்ட அணுகுமுறை என்பது கீழ்க்கண்ட அம்சங்களை முக்கியமானதாகக் கொண்டிருந்தது.

1, இந்தியாவின் செல்வாக்குக்குள் உட்பட்ட ஒருபகுதியே இலங்கை.
2. இந்த உண்மையை உணர்ந்து இப்பிரச்னைக்குள் நுழைய அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகளும் பாகிஸ்தான், இஸ்ரேல், சீனா போன்ற இந்திய எதிரி நாடுகளும் தயங்கியன.
3. இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அரசியல் ரீதியான தீர்வுகாண ஜெயவர்த்தனா முயல வேண்டுமேதவிர, இராணுவ ரீதியான தீர்வுகாண முயன்றால் இந்தியா ஒருபோதும் அதை அனுமதிக்காது.
4. இலங்கைக்கு எந்த வெளிநாடாவது இராணுவ ரீதியான உதவியளிக்க முன்வருமேயானால் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கையாக அது கருதப்பட்டது.
5. திரிகோணமலை மாவட்டத்திலே இலங்கையில் வேறு எந்தப் பகுதியிலோ அந்நிய இராணுவத்தளம் எதுவும் அமைவதை இந்தியா எதிர்க்கும் என்பது இலங்கைக்கு உணர்த்தப் பட்டது.
6. கிழக்கு மாநிலத்தில் குறிப்பாகத் திரிகோணமலை மாவட்டத்தின் நில அமைப்பிலோ, மக்கள் விகிதாசாரத்திலோ எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது என்பதில் இந்தியா உறுதியாக இருந்தது. அதாவது தமிழரின் பெரும்பான்மையினைக் குறைத்துச் சிங்களர் எண்ணிக்கையை அதிகரிக்கும் சிங்கள அரசின் திட்டத்தை இந்தியா கடுமையாக எதிர்த்தது.
7. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் மூலம் இலங்கை அரசுடன் நடத்தப்படும் பேச்சு வார்த்தைகள் தோல்வியடையுமானால் போராளிகளின் இயக்கங்களைப் பயன்படுத்தி இலங்கை அரசுக்கு நிர்ப்பந்தம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்தியா செயல்பட்டது. போராளிகளின் இயக்கங்களைத் பலவீனப்படுத்தும் காரியத்தை செய்ய இந்தியா அரசு விரும்பவில்லை.

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பது இந்திய அரசின் நோக்கமல்ல, தன்னுடைய பிரதேச நலனை முக்கியமாகக் கொண்டு இந்திய அரசு கடைப்பிடித்த இந்த அணுகுமுறையின் விளைவாக இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு உடனடியான தீர்வு ஏற்படாவிட்டாலும், இலங்கைத் தமிழர் நலன்களுக்கோ இந்தியாவின் நலன்களுக்கோ பெருமளவு பாதிப்பு எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. இலங்கையைத் தாஜா செய்துவந்த இந்தியாவின் கொள்கை தேவையற்ற தீமைகளை விளைவித்துவிட்டது என்பதை திருமதி. இந்திரா உணரத்தொடங்கிய வேளையில் எதிர்பாராதவிதமாகப் படுகொலைக்கு ஆளானார். இதன்விளைவாக இலங்கைப் பிரச்னையில் ஒரு மாபெரும் திருப்பம் ஏற்பட்டுவிட்டது. இந்தியப் பிரதமராக திரு. ராஜீவ் பொறுப்பேற்ற பிறகு இலங்கைப்பிரச்னையில் மெல்ல மெல்ல புதிய அணுகுமுறை கைக்கொள்ளப்பட்டது. திரு. ஜி. பார்த்தசாரதிக்குப் பதில் திரு. ரோமேஷ் பண்டாரி முக்கியத்துவம் பெறத் தொடங்கினார். இலங்கைப் பிரச்னையில் பிரதமர் ராஜீவின் முக்கிய ஆலோசகராகப் பண்டாரி விளங்கினார்.

## திம்பு மாநாடு

1985ஆம் ஆண்டு பண்டாரியின் முயற்சியின் பேரில் நடத்தப்பட்ட திம்பு மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென்று தமிழ்ப் போராளிகளின் இயக்கங்களை இந்திய அரசு நிர்ப்பந்தித்தது. பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கும் போதே இலங்கையில் அப்பாவித் தமிழர்களைச் சிங்கள இராணுவம் கொன்று குவித்ததைக் கண்டிக்கும் வகையில் மாநாட்டிலிருந்து போராளிகளின் இயக்கங்கள் வெளிநடப்புச்

www.tamilarangam.net



செய்தன இதைக்கண்டு கடும்கோபம் கொண்ட பண்டாரியின் தூண்டுதலின் பேரில் பிரதமர் ராஜீவ்காந்தி கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்தார்.

1. திரு. பாலசிங்கம், திரு. சந்திரகாசன், திரு. சத்தியேந்திரா ஆகியோர்களை இந்தியாவிலிருந்து வெளியேறும்படி உத்தரவிட்டார்.
2. திரு. ஜி. பார்த்தசாரதியால் தயாரிக்கப்பட்டு, ஜெயவர்த்தனாவினால் ஓரளவுக்கு ஒப்புக்கொள்ளப் பட்ட திட்டத்தைக் கைகழுவினார்.
3. ''தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம்'' என்பதையும் ''தமிழர்களுக்கு ஒரு தாயகம் உண்டு'' என்பதையும் வற்புறுத்துவதைக் கைவிட வேண்டுமென்று போராளிகளை நிர்ப்பந்தித்தார்.
4. மாநில சுயாட்சிப் பற்றிய தெளிவற்ற யோசனைகளைக்கொண்ட சிங்கள அரசின் திட்டத்திற்கு ஆதரவளித்தார்.

தங்கள் நிர்ப்பந்தத்திற்கு அடிபணிய மறுத்த போராளிகளின் தகவல் தொடர்பு சாதனங்களைப் பறிமுதல் செய்யும்படி இந்திய அரசு உத்தரவிட்டது. அதன்படி பலர் கைது செய்யப்பட்டனர்.

இந்திய அரசின் இந்த நடவடிக்கைகள் தமிழ்நாட்டு மக்களுக்கு ஆத்திரத்தையூட்டின. டெசோ அமைப்பின் சார்பில் இதற்கு எதிராகப் போராட்டம் நடத்தப்பட்டு ஆயிரக்கணக்கானவர் சிறை புகுந்தனர். எதிர்ப்பு வலுப்பதைக் கண்ட இந்திய அரசு வேறுவழியில்லாமல் பின்வாங்கியது. இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட மூவரும் இந்தியா திரும்ப அனுமதிக்கப்பட்டனர்.

பிரதமர் ராஜீவின் முன்யோசனையற்றதும், அனுபவமற்றதுமான போக்கின் விளைவாக இலங்கையில் கீழ்க்கண்ட மோசமான விளைவுகள் ஏற்பட்டன.

1. இஸ்ரேலிய மோசாட் படையினர் இலங்கைக்கு வந்து, சிங்கள ராணுவத்திற்குப் பயிற்சி கொடுத் தனர்.
2. மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த கூலிப் படையினர் தமிழர்களுக்கு எதிராகப் போராட வரவழைக் பட்டனர்.
3. சிங்கள ராணுவத்தின் எண்ணிக்கை 5 மடங்காகப் பெருக்கப்பட்டது.
4. மேற்கு ஐரோப்பிய நாடுகள், இஸ்ரேல், பாகிஸ்தான், சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் இலங்கைக்கு இராணுவ ரீதியான உதவிகள் அளித்தன.
5. திரிகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்கப் போர்க் கப்பல்களுக்கு எண்ணெய் நிரப்பிக் கொள்ளும் வசதியும் ஓய்வு, தங்குமிட வசதிகளும் அளிக்கப்பட்டன.
6. இலங்கை விமானங்களை ஓட்டுவதற்குப் பாகிஸ்தான் விமானிகள் நியமிக்கப்பட்டனர்.
7. திரிகோணமலையில் இந்தியாவுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய நவீன சக்திவாய்ந்த வானொலி நிலையம் அமைக்கப்பட்டது.
8. இந்தியாவுக்கு எதிரிகளாக உள்ள நாடுகளின் செல்வாக்கு இலங்கையில் ஓங்கியது.
9. தமிழர்களுக்கு எதிராகவும், சிங்கள அரசுக்குச் சாதகமாகவும் இந்திய அரசின் நடவடிக்கை கள் திருப்பப்பெறத்தொடங்கின.
10. ராஜீவ் பிரதமரானபிறகு சுமார் 20 ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். சுமார் 5 இலட்சம் தமிழர்கள் அகதிகளானார்கள். பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் மானம் இழந்தார்கள். பல ஆயிரம்கோடி ரூபாய் பெறுமான தமிழர்களின் சொத்துக்களும், ஊர்களும் அழிக்கப்பட்டன. தமிழர்களின் மண்ணில் சிங்களவர்கள் தங்குதடையின்றி குடியேறினர்.

பிரதமர் ராஜீவின் அணுகுமுறையைப் புரிந்துகொண்ட ஜெயவர்த்தனா அவருக்குக் கீழ்க்கண்ட வாக்குறுதிகளை அளித்தார்.

1. இந்தியாவுக்குப் பாதகமற்றப் போக்கை உள்நாட்டு ரீதியாகவும், வெளிநாட்டு ரீதியாகவும் இலங்கை கடைப்பிடிக்கும்.
2. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையுடன் முரண்படாதவாறும், அதே வேளையில் வேறு ஒரு வெளிநாடு இலங்கையில் தனது செல்வாக்கைச் செலுத்த முடியாதவாறும் இலங்கை பார்த்துக்கொள்ளும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த இருவாக்குறுதிகளுக்குப் பதிலாக ராஜீவ் கீழ்க்கண்ட வாக்குறுதிகளை ஜெயவர்த்தனாவுக்கு அளித்தார்.

1. இலங்கையை இரண்டாகப் பிரித்து தமிழீழம் அமைப்பதற்கு இந்தியா ஒருபோதும் ஆதரவு அளிக்காது.

2. இந்தியாவைத் தளமாகப் பயன்படுத்த போராளிகள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

3. தேவைப்பட்டால் இந்திய ராணுவத்தைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் ஒடுக்க இந்தியா உதவும்.

இந்த அடிப்படையில்தான் 1986ஆம் ஆண்டில் ராஜீவ்—ஜெயவர்த்தனா உடன்பாடு ஏற்பட்டது. இந்த மோசமான உடன்பாட்டின் விளைவாக இந்திய இராணுவம் இலங்கைக்குச் சென்று விடுதலைப்புலிகளை வேட்டையாடுவது என்ற பெயரால் தமிழ் மக்களைக் கொன்று குவித்துவருகிறது. இந்த உடன்பாட்டின் படி தமிழ் மக்களுக்கு எல்லா உரிமைகளையும் பெற்றுதருவேன் என்று ராஜீவ் கூறியது முற்றிலும் பொய்யாகிவிட்டது.

இந்த உடன்பாட்டின் விளைவாக என்ன நடக்க வேண்டுமென்று ஜெயவர்த்தனா விரும்பினாரோ அது நடந்தது. ஈழத் தமிழர்களுக்கு இந்தியா உதவிக்கு வரக்கூடாது, மாறாக ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்குமிடையே மோதல் உருவாக வேண்டுமென ஜெயவர்த்தனா விரும்பினார். இந்த நோக்கத்துடன் அவர் விரித்த வலையில் ராஜீவ் காந்தி தலைகீழாக விழுந்தார். இதன் விளைவாகத் தமிழர்களைப் பாதுகாக்க அனுப்பப்பட்ட இந்திய ராணுவம் கடந்த ஒன்றரை ஆண்டு காலத்திற்கு மேலாகத் தமிழர்களைத் தொடர்ந்து வேட்டையாடிவருகிறது. எந்தத் தமிழர்கள் இந்தியாவையே நம்பி இருந்தார்களோ அந்தத் தமிழர்களுக்கு இந்தியா துரோகமிழைத்தது. இந்த உடன்பாட்டின் மோசடியான விளைவுகள் குறித்து எல்லோருமே தெளிவாக அறிந்திருக்கிற காரணத்தினால் இதற்குமேல் இங்கு விளக்க வேண்டியதில்லை என நினைக்கிறேன்.

இந்திய ராணுவத்தையும் சிங்கள ராணுவத்தையும் எதிர்த்து தளபதி பிரபாகரன் தலைமையில் விடுதலைப்புலிகளும் தமிழர்களும் வீரஞ்செறிந்த விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். போராளிகளின் போராட்டம் என்ற நிலையில் இருந்து மக்கள் போராட்டமாக மலர்ந்துள்ளது. நினைத்தாலே மெய்சிலிர்க்கவைக்கும் எண்ணற்ற தியாகங்களை விடுதலைப்புலிகள் புரிந்து புதிய புறநானூற்றைப் படைத்துவருகின்றனர்.

இப்போராட்டத்தின் எதிரொலி தமிழகத்திலும் கேட்கத் தொடங்கிவிட்டது. போலித்தனமான போராட்டங்களிலும், வெற்றுக் கோஷங்களிலும் மயங்கிக் கிடந்த தமிழ்நாட்டு இளைஞர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். உண்மையான தியாகம் என்றால் என்ன? 'உண்மையான போராட்டம் என்றால் என்ன? என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். தமிழீழ வீர இளைஞர்கள் சிறைச்சாலைகளில் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சிகளும், சிங்கள ராணுவத்தை எதிர்த்துக் கொஞ்சமும் அஞ்சாது போராடும் விடுதலைப் புலிகளின் வீரசாகசங்களும், எதிரிகளின் கையில் பிடிபட்டால் 'சயனைடு' அருந்தி வீர மரணத்தை விரும்பித் தழுவிக்கொண்ட விடுதலைப்புலிகளின் தீரமும், தமிழக இளைஞர்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளன. தமிழகத்தில் உள்ள சில அரசியல்வாதிகளைப்போல வெறும் வாய்வீச்சு வீரர்களாக இல்லாமல் உண்மையான செயல் மறவர்களாக விடுதலைப் புலிகள் விளங்குவதைத் தமிழகம் உணரத் தொடங்கிவிட்டது.

கடந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பகிரங்கமான ஆதரவையளிக்க அ. தி. மு. க. தயங்கியது. அ. தி. மு. க. வின் தலைவரான திரு. எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராகயிருந்தபோது விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் மற்ற போராளிகளின் இயக்கங்களுக்கும் வரம்பிற்குட்பட்ட சில உதவிகளை இரகசியமாகச் செய்தார். அதே நேரத்தில் இப்பிரச்னையில் மத்திய அரசு மேற்கொண்ட அத்தனை நடவடிக்கைகளுக்கும் பகிரங்கமான ஆதரவையளித்தார். ஒரு கட்டத்தில் மத்திய அரசு எடுத்த நிலைகளுக்கு ஆதரவான நிலையெடுக்கும்படி தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு அ. தி. மு. க. அரசு நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியது. ''தமிழீழ விடுதலைப் போராளிகள் ஏற்கமறுக்கும் அரசியல் தீர்வுகளை அவர்கள்மீது திணிக்கக் கூடாது'' என்று மத்திய அரசுக்கு எச்சரிக்கைச் செய்ய அ. தி மு. க. அரசு முன்வரவில்லை.

www.tamilarangam.net



## டெசோ அமைப்பு

1986 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு திரட்டுவதற்காக தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பு (டெசோ) ஒன்று அமைக்கப்பட்டது. தி. மு. க., திராவிடர் கழகம், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் (தமிழர் தேசிய இயக்கம்) ஆகிய மூன்றும்கூடி இந்த அமைப்பைத் தோற்றுவித்தன. பின்னர் இதில் தமிழ்நாடு பார்வர்டுபிளாக் கட்சியும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக சகல மாவட்டங்களில் பேரணிகளை டெசோ அமைப்பு நடத்தியது. இறுதியாக மதுரையில் 1986 ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் தேதி பிரமாண்டமான அளவில் டெசோ மாநாடு நடத்தப்பட்டது. அகில இந்தியத் தலைவர்கள் பலரும் இந்த மாநாட்டில் பங்கேற்றனர். இம்மாநாட்டில் திரண்டிருந்த மக்கள் சக்திகண்டு இந்திய அரசு அச்சமடைந்தது. எனவே டெசோ அமைப்பைச் சீர்குலைப்பதற்கு முயற்சி செய்தது.

விடுதலைப் புலிகளுக்கும், டெலோ இயக்கத்தினருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் உண்மை யான பின்னணி இந்திய உளவுத்துறையான RAW என்னும் உண்மையைப் புரிந்துகொள்ளாமல் தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி ஒரு சார்பான நிலையெடுத்து விடுதலைப் புலிகளைக் கண்டனம் செய்யத் தொடங்கினார். ''ஈழப் போராளிகள் ஒன்றுபடும்வரை இப்பிரச்னையில் தான் பேசப்போவதில்லை'' என்று திடீரென அறிவித்து விட்டு அதைத் தொடர்ந்து இப்பிரச்னையில் மௌனம் சாதித்தார். இது இந்திய அரசுக்கு வரப்பிரசாதமாக அமைந்துவிட்டது. இந்திய அரசு எதை விரும்பியதோ அது நடந்தது. டெசோ அமைப்புச் செயல்படாமல் முடக்கிவைக்கப்பட்டது. யாழ் மக்களைப் பட்டினிபோட்டுக் கொல்வதற்காக இலங்கை அரசுமுற்றுகைப் போராட்டம் நடத்தியபோதும் தொடர்ந்து தமிழீழத்தில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டபோதும் டெசோ அமைப்பு கூட்டப்படவோ செயல்படவோ இல்லை.

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் தேதி இந்திய-இலங்கை உடன்பாட்டில் பிரதமர் ராஜீவ்-ஜெயவர்த்தனா ஆகியோர் கையெழுத்திட்டனர். இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்தை அடியோடு நாசமாக்கும் இந்த உடன்பாட்டினை ஆளும் கட்சியாக இருந்த அ. தி. மு. க. ஆதரித்தது. பிரதான எதிர்க்கட்சியான தி. மு. க. எதிர்த்துப் போராட முன்வரவில்லை. இந்த இரு கட்சிகளின் நிலைப்பாட்டினை உளவுத்துறையின் மூலம் முன்னதாகவே அறிந்திருந்த பிரதமர் ராஜீவ் மேலும் துணிவு பெற்றார். இந்த உடன்பாட்டினை பிரபாகரன் ஏற்க மறுத்து எதிர்த்தபோது அவரின் எதிர்ப்பை அலட்சியம் செய்ய பிரதமர் ராஜீவ் துணிந்தார். தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் (தமிழர் தேசிய இயக்கம்), திராவிடர் கழகம் மற்றும் பல தமிழர் அமைப்புகளும் ஒன்றுபட்டு நின்று இந்த உடன்பாட்டை எதிர்த்துப் போராடின.

ஆனால் உடன்பாட்டிற்குப் பின்னர் உருவான சூழ்நிலைகளும், இந்திய ராணுவம்-விடுதலைப் புலிகள் மோதலும் அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் உருவான கொந்தளிப்பும் இரு கழகங்களின் தலைமைகளைச் சிந்திக்கவைத்தன. இந்திய ராணுவ நடவடிக்கைகளைக் கண்டிக்க அவர்கள் முன்வந்தார்கள். இந்த கண்டனத்தைக்கூட ஓரளவோடு நிறுத்திக்கொண்டார்கள்.

இரு கழகங்களும் தமிழ் நாட்டிலுள்ள மற்ற கட்சிகளும் ஒன்றுசேர்ந்து இந்திய ராணுவத் தாக்கு தலுக்கு எதிராகக் குரல்கொடுத்திருப்பார்களேயானால் மத்திய அரசின் போக்கில் மாற்றம் ஏற்பட்டிருக்கும். போரை நிறுத்தவும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் மத்திய அரசு முன்வந்திருக்கும். கடந்த ஓராண்டு காலத்திற்கு மேலாக இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களினால்சொல்ல முடியாத அளவுக்கு வேதனைகளையும், கொடுமைகளையும் தமிழீழ மக்கள் அனுபவித்ததற்கு, தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் போதுமான அளவு மத்திய அரசுக்கு எதிரான கொந்தளிப்பு ஏற்படாததுதான் காரணமாகும். தங்களுக்குள் உள்ள சகல கருத்து வேறுபாடுகளையும் ஒத்திவைத்துவிட்டு இலங்கையில் இந்திய ராணுவத் தலையீட்டுக்கு எதிராகத் தமிழ்நாட்டு மக்களை ஒன்றுபடுத்தி மாபெரும் போராட்டத்தினை நடத்த தமிழகத்திலுள்ள முக்கிய கட்சிகள் முன்வரவில்லை. இதன் விளைவாக இந்திய அரசு மேலும் துணிவு பெற்று, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

## இந்திய அரசின் நோக்கம்

இலங்கைத்தீவு இரு நாடுகளாகப் பிரிவதை இந்தியா விரும்பவில்லை. அதை ஒரே நாடாக இருக்கவைத்து அதனை தனது நலன்களுக்குள்பட்ட வகையில் கையாள்வதே தனக்குச் சாதகமானதென இந்திய அரசு நினைக்கிறது. எனவே தமிழீழக் கோரிக்கையை இந்தியா ஆதரிக்கவில்லை. இலங்கைத்

www.tamilarangam.net



தமிழர்களின் பிரச்னையைத் தனது நலனுக்கு உகந்தவகையில் ஓரளவு தீர்த்துவைப்பதும் அதேவேளையில் தனது தலைமையை இலங்கை அரசை ஏற்கவைப்பதுமே இந்தியாவின் முக்கிய நோக்கங்களாகும். இந்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள இலங்கை அரசுடன் சுமூக உறவுகளைக் கையாள்வதுடன் இலங்கை அரசுக்கு எத்தகைய உதவிகளைச் செய்தேனும் அதைத் திருப்திப்படுத்த இந்திய அரசு தொடர்ந்து முயன்று வந்திருக்கிறது.

நேருவின் காலத்திலிருந்து ராஜீவ்காந்தியின் காலம் வரை இதுவே இந்திய அரசின் கொள்கையாக இருந்துவந்திருக்கிறது. தமிழ்நாட்டிற்கும், தமிழீழத்திற்கும் பெரும் நன்மைபயக்கும் திட்டமான சேதுக்கால்வாய்த் திட்டத்தை இலங்கை அரசின் ஆட்சேபனையை ஏற்று நேரு அதைக் கைவிட்டார். இலங்கை அரசைத் திருப்திப்படுத்துவதற்காக 5 இலட்சம் இந்திய வம்சாவழித் தமிழர்களை அகதிகளாக ஏற்க பிரதமர் சாஸ்திரி ஒப்புக்கொண்டு சிரிமாவோ-சாஸ்திரி உடன்பாடு ஏற்பட்டது. அதைப்போலவே தமிழ்நாட்டிற்குச் சொந்தமான கச்சத்தீவை இலங்கைக்குப் பிரதமர் இந்திரா தாரைவார்த்துக் கொடுத்தார்.

1971ஆம் ஆண்டு சிங்களத் தீவிரவாத இயக்கமான ஜனதா விமுக்தி பெரமுன ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியில் ஈடுபட்டபோது இலங்கை அரசாங்கத்திற்கு உதவியாக இந்திய ராணுவத்தை அனுப்பி அந்தக் கிளர்ச்சியை அடக்குவதற்கு இந்தியா துணைபுரிந்தது. இப்படித் தொடர்ந்து இலங்கை அரசைத் திருப்திப்படுத்துவதையே தனது நோக்கமாகக்கொண்டு இந்திய அரசு செயல்பட்டு வந்திருக்கிறது.

## நிலைகுலையாத பிரபாகரன்

இந்திய மண்ணில் பிரபாகரன் இருந்தபோதும் சரி, இப்போதும் சரி ஒருபோதும் இந்திய அரசியலிலோ, தமிழக அரசியலிலோ அவர் தலையிட்டது இல்லை. கருத்துக்கள்கூட கூறியது கிடையாது. எப்போதும் நடுநிலைமையுடன் அவர் இருந்திருக்கிறார். இந்தியாவிலுள்ள சகல கட்சிகளின் ஆதரவையும் அவர் நாடியிருக்கிறார். எனவே அவரை ஒருசார்பாகச் செயல்படுபவர் என்ற தவறான கருத்து யார் மனதில் இருந்தாலும் அதை அகற்றிக்கொண்டு அவரை ஆதரிக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.

எந்தவொரு நாட்டின் விடுதலைப் போராட்டமும் தகுதி வாய்ந்த தேசியத் தலைமையின் கீழ்தான் வெற்றிபெற முடியும். அந்த வகையில் தமிழீழ மக்களின் உண்மையான தேசியத் தலைவராக திரு. பிரபாகரன் திகழ்கிறார். தமிழீழ இலட்சியத்தில் தனக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை பல கட்டங்களில் மெய்ப்பித்துள்ளார். அச்சுறுத்தல்களுக்கு அவர் அடிபணிந்ததில்லை. ஆசை வார்த்தைகளில் அவர் மயங்கியதில்லை. அவர் சுதந்திரமாகச் சிந்தித்து செயல்படுபவர்.

1986ஆம் ஆண்டு திம்புவில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட 6 தமிழர்களின் அமைப்புகளும் ஏகமனதாக நான்கு முக்கிய அடிப்படைக் கோட்பாடுகளை அறிவித்தன. இந்த நான்கு அம்சங்களிலிருந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எப்., பிளாட், டெலோ, ஈராஸ் ஆகிய இயக்கங்கள் விலகியும் நழுவியும் சென்றுவிட்டன. ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஒன்றுதான் இந்த நான்கு அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து கொஞ்சமும் விலகாமல் இன்னமும் உறுதியாக நிற்கிறது.

1987ஆம் ஆண்டு பிப்ரவரியில் பெங்களூரில் சார்க் மகாநாடு நடைபெற்றபோது ஜெயவர்த்தனாவையும், பிரபாகரனையும் சந்திக்க வைப்பதற்கும் ஒரு உடன்பாடு காண்பதற்கும், பெருமுயற்சியைப் பிரதமர் ராஜிவ் மேற்கொண்டார். அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த திரு. எம். ஜி.ஆர். அவர்களையும், பிரபாகரனுடன் பெங்களூருக்கு வரச்செய்து அவர் மூலமாக பிரபாகரனுக்கு ஆசைவார்த்தைகள் காட்ட முயற்சிகள் செய்யப்பட்டது. வடக்கு மாநிலத்தை மட்டும் தற்போது ஏற்றுக்கொண்டு அதன் முதலமைச்சராகும்படி பிரபாகரனை ராஜீவ் காந்தியும், எம். ஜி. ஆரும் வற்புறுத்தினார்கள்.

''இப்போதைக்கு இந்த ஏற்பாட்டை பிரபாகரன் ஒப்புக்கொண்டால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு நிதி உதவி உட்பட எல்லா வகையான உதவிகளையும் செய்வதாகவும் எம். ஜி. ஆர். ஆசை காட்டினார். இந்த ஆசை வார்த்தைகளுக்கும், அச்சுறுத்தலுக்கும்பிரபாகரன் கொஞ்சமும் மயங்கவில்லை. இதன்விளைவாக அவர் மீது பிரதமர் கடும் கோபம் கொண்டார். பிரதமர் ராஜீவைத் திருப்திப்படுத்த முதலமைச்சர் எம். ஜி. ஆரும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். சென்னையிலிருந்த விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் சோதனையிடப்பட்டன. அவர்களிடமிருந்த தகவல் தொடர்பு சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இத்நடவடிக்கைகளைக் கண்டித்து பிரபாகரன் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாக அறிவித்தார். அதற்குப் பின்னரே கைப்பற்றப்பட்ட சாதனங்கள் திரும்பத் தரப்பட்டன. இதற்குப் பின்னர் இனி தமிழ்நாட்டில் இருப்பது சரியல்ல என்று முடிவு செய்து பிரபாகரன் தாயகம் திரும்பினார்.

www.tamilarangam.net



1988ஆம் ஆண்டு ராஜீவ் காந்தியும், ஜெயவர்த்தனாவும் ஒப்பந்தம் செய்துகொண்டபோது அந்த உடன்பாட்டை ஏற்று வடக்கு-கிழக்கு மாநிலத்தில் முதலமைச்சர் பதவியை ஏற்குமாறு பிரபாகரன் நிர்ப்பந்திக்கப்பட்டார். தனது இலட்சியத்தைக் கைவிடவோ பதவி நாற்காலியில் அமரவோ பிரபாகரன் திட்டவட்டமாக மறுத்தார். அதன் பின்னர் திலீபனின் அறநெறிப் போராட்டம் நடைபெற்று அவன் உன்னதமான உயிர்த் தியாகம் செய்தான். அதற்குப் பிறகுகூட இந்திய-இலங்கை அரசுகள் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ள வில்லை. பின்னர் புலேந்திரன், குமரப்பா உட்பட 12 விடுதலைப் புலிகள் உயிர்த் தியாகம் செய்ததைத் தொடர்ந்து பிரபாகரனையும் தீர்த்துக்கட்ட முயற்சிகள் செய்யப்பட்டன. இந்திய ராணுவத்தை ஏவி விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கு ராஜீவ் காந்தி தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டார். பிரபாகரனும் அவரது தோழர்களும் கடுமையாக எதிர்த்துப் போரிட்டு வருகிறார்கள். சொல்லமுடியாத துன்பங்களுக்கு ஆளாகிய போதிலும்கூட மனம்சோராமல் பிரபாகரன் தொடர்ந்துப் போராடிவருகிறார்.

தனது இலட்சியங்களை விட்டுக்கொடுத்து யாருடைய கைப்பாவையாகவும் மாற அவர் ஒருபோதும் ஒப்புக்கொண்டது இல்லை. அவரைத் தங்கள் கைப்பாவையாக ஆக்குவதற்கு முயற்சிகள் செய்தவர்களும் தங்கள் முயற்சியில் வெற்றிபெற்றதில்லை. அவர் எப்படிப்பட்டவர் என்பதற்கு இந்நிகழ்ச்சிகள் சான்றுபகருகின்றன. உண்மையான ஒரு தேசியத் தலைவன் எப்படித் திகழவேண்டுமோ அப்படி பிரபாகரன் திகழுகிறார்.

## தமிழகத்தின் கடமை

எனவே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் அவருடைய இணையற்ற தலைவர் திரு. பிரபாகரன் அவர்களுக்கும் ஆதரவளிக்கவேண்டிய கடமை தமிழ்நாட்டிலுள்ள சகல கட்சிகளுக்கும் உண்டு. குறிப்பாகத் தமிழினக் கட்சிகள் என்று சொல்லிக்கொள்கிற தி. மு. க., அ. தி. மு. க. கட்சிகளுக்கு உண்டு.

அதிலும் தற்போது தமிழகத்தின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுள்ள திரு. கருணாநிதி அவர்களுக்கு மகத்தான கடமை உண்டு.

வங்கதேச விடுதலைப் போராட்டம் நடந்தபோது வங்க விடுதலைப் போராளிகளுக்கு சகலவிதமான உதவிகளையும் அப்போதைய மேற்குவங்க முதலமைச்சர் திரு. சித்தார்த்தா சங்கர்ரே செய்தார், மேற்குவங்க எல்லைக்குள் விடுதலைப் போராளிகளின் முகாம்கள் அமைக்கப்பட்டன. அவர்களுக்கு உறுதுணையாக மேற்கு வங்க அரசும், மக்களும் செயல்பட்டனர். வங்காளதேச விடுதலைப் போராட்டத்திற்கு உதவவேண்டுமென்று இந்திய அரசை வற்புறுத்தும் தீர்மானம் மேற்குவங்கச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வங்காளதேசம் அமைய மேற்குவங்க அரசு செய்த உதவிகளைப்போல, தமிழீழம் அமையத் தேவையான உதவிகளை செய்ய தமிழக அரசு முன்வரவேண்டும்.

முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் கீழ்க்கண்டவற்றைச் செய்ய வேண்டுமென்று உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

(1) ''இலங்கையில் உடனடியாகப் போர்நிறுத்தம் செய்து இந்திய அமைதிப்படைத் திரும்ப வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரன் அவர்களுடன் இலங்கை அரசு நேரடியாகப் பேச்சுவார்த்தைத் தொடங்க ஆவனசெய்ய வேண்டுமென இந்திய அரசை வற்புறுத்தும் தீர்மானம் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.

(2) இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் விளைவாக இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுகளைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அமல் நடத்துமாறு இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும்.

(3) பேச்சுவார்த்தையின் முடிவுகளை அமல்நடத்த இலங்கை அரசு மறுத்தாலும் தயக்கம் காட்டினாலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்புடன் அவற்றை உடனடியாக அமலுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் எனத் தமிழக அரசு வற்புறுத்த வேண்டும்.

(4) இலங்கையில் இந்தியத் தூதுவராக இப்பிரச்னை குறித்து நன்கு அறிந்த தமிழர் ஒருவரே நியமிக்கப்பட வேண்டுமென முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் டில்லியை வற்புறுத்த வேண்டும்.

(5) மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களை அழைத்து, இக்கோரிக்கைகளை விளக்கி அவர்களின் ஆதரவைப் பெறுகிற முயற்சியில் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ஈடுபட வேண்டும்.

(6) உலகெங்கிலுமுள்ள மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்காகவும், உலக நாடுகளுக்கு உண்மைகளை எடுத்துரைப்பதற்காகவும் தூதுக்குழு ஒன்றினை சகல நாடுகளுக்கும் அனுப்புவதற்கான முயற்சியை முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

(7) பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அங்கீகாரத்தைப் போல தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அங்கீகரிக்குமாறு இந்திய அரசைத் தமிழக அரசு வற்புறுத்த வேண்டும்.

விவேகாநந்தா அச்சகம், மதுரை,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்